ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2163 - 2020 පෙබරවාරි මස 14 වැනි සිකුරාදා - 2020.02.14

*2163 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | 196 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 196 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 202 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2020, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

195-B 82007-405 (2020/02)

## மற்றைய நியமனங்களும் பிறவும்

திருத்தம்

**காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு**

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டம்*

*27 ஆம் பிரிவின் கீழ் நில அளவைச் சபையின் உறுப்பினர்களை நியமனம் செய்தல்*

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 27 (அ) பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நில அளவைச் சபையின் உறுப்பினர்களை நியமனம் செய்து 2019.04.26 ஆந் திகதிய 2,121 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 2020.02.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்கின்றேன்.*

(அ) பதவி வழி உறுப்பினர்கள்

I. *அம்பவல லியனகே ஷியாமலீ சித்ரலேகா பெரேரா - மேலதிக நில அளவையாளர் நாயகம் - உப தலைவர் - 2020.02.01 ஆந் திகதி தொடக்கம் மேலதிக நில அளவையாளர் நாயகம் பதவியில் இருக்கும் காலப்பகுதி வரை*

எஸ். எம். சந்திரசேன,
*காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2020, சனவரி 29.*

*02-285*

---

## வரவு செலவுத் திரட்டுக்கள்

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

*2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயற்பாட்டுக் கூற்று*

| | மார்கழி 31 2018 | மார்கழி 31 2017 |
|---|---|---|
| **செயற்பாட்டு வரவுகள்/வருமானங்கள்** | | |
| நடைமுறை மானியங்கள் | 1,477,100,000 | 1,193,688,000 |
| தேறிய வரவு /(இழப்பு) ஏனைய செயற்பாடுகளிலிருந்து | 1,070,359 | 1,013,263 |
| ஏனைய வரவுகள் | 20,860,194 | 44,209,662 |
| | 1,499,030,553 | 1,238,910,925 |
| மாணவர்களுக்கான நிதி உதவி | 187,037,900 | 92,233,400 |
| | **1,686,068,453** | **1,331,144,325** |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,107,373,273 | 899,303,660 |
| பிரயாணச் செலவுகள் | 4,473,476 | 4,160,717 |
| விநியோக மற்றும் நுகவுச் செலவுகள் | 43,369,666 | 45,693,665 |
| பராமரிப்புச் செலவுகள் | 26,834,397 | 25,262,342 |
| ஒப்பந்த வேலைச் செலவுகள் | 221,955,061 | 234,397,626 |

| | மார்கழி 31 2018 | மார்கழி 31 2017 |
|---|---|---|
| ஆய்வும் அபிவிருத்தியும் | 471,567 | 1,124,784 |
| பெறுமானத் தேய்வும் ஒதுக்கச் செலவுகளும் | 375,764,645 | 313,865,444 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 64,352,310 | 49,917,967 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | **1,844,594,395** | **1,573,726,205** |
| **செயற்பாட்டுச் செலவுகளினால் செலவிலும் கூடிய வருமானம் (வருமானத்திலும் கூடிய செலவினம்)** | (345,563,842) | (334,815,279) |
| மாணவர்களுக்கான நிதி உதவி | 187,037,900 | 92,233,400 |
| **மொத்த செயற்பாடுகளிலிருந்து வரும் செலவிலும் கூடிய வருமானம் (வருமானத்திலும் கூடிய செலவினம்)** | **(345,563,842)** | **(334,815,279)** |
| அசாதாரண செயற்பாடுகள் | | |
| (பதிவளித்தலும் ஏனைய சீராக்கமும்) | (27,968) | (231,947) |
| **பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட குறித்த காலப்பகுதிக்கான தேறிய காலத்திற்கான ஏற்ற இறக்கம்** | **(345,591,810)** | **(335,047,226)** |

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### 2018, திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளபடியான நிதிக்கூற்று

| **சொத்துக்கள்** | 2018 ரூபா | | 2017 ரூபா | |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்து** | | | | |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 4,573,504,638 | | 4,290,663,417 | |
| புரிந்துகொள்ள முடியாத சொத்துக்கள் | 43,645,531 | | 41,404,286 | |
| முதலீடுகள் (நீண்ட காலம்) | 7,451,355 | | 6,894,067 | |
| முடிவுறாத, செயற்பாட்டுநிலை மூலதன வேலைகள் | 524,761,553 | | 471,144,490 | |
| | | 5,149,363,077 | | 4,810,106,260 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருட்கள்/கையிருப்புக்கள் | 9,661,200 | | 11,163,371 | |
| வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 631,106,584 | | 636,998,692 | |
| முதலீடுகள் (குறுகிய காலம்) | 84,563,384 | | 77,846,265 | |
| பணமும் பணம் சார்ந்தவையும் | 364,139,196 | | 202,013,187 | |
| | | 1,089,470,364 | | 928,021,514 |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,238,833,441** | | **5,738,127,774** |

| **பொறுப்புக்கள்** | *2018 ரூபா* | | *2017 ரூபா* | |
|---|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | 254,248,051 | | 286,616,358 | |
| அட்டுறு செலவுகள் | 40,214,472 | | 50,227,388 | |
| குத்தகை பொறுப்பு (குறுகிய காலம்) | 5,107,034 | 299,569,557 | 4,604,282 | 341,448,029 |
| **நிலையான பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | 6,799,397 | | 5,612,573 | |
| குத்தகை பொறுப்பு (நீண்ட காலம்) | 12,209,160 | | 17,286,143 | |
| பணிக்கொடை - ஒதுக்கம் | 215,973,769 | | 170,809,693 | |
| வரையறுக்கப்பட்ட நிதி | 91,765,658 | | 76,717,649 | |
| அன்பளிப்பும் நன்கொடையும் | 6,342,684 | | 8,888,765 | |
| ஏனைய மானியங்கள் | 884,691,301 | | 756,285,640 | |
| | | 1,217,781,969 | | 1,035,600,462 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 1,517,351,526 | | 1,377,048,490 |
| **தேறிய சொத்துக்கள்** | | | | |
| திரண்ட நிதி (மூலதன மானியம்) | 6,388,598,617 | | 5,692,915,886 | |
| பிணைக் கடமைப்பாடும் ஏனையவையும் | 184,705,820 | | 188,269,504 | |
| பொது ஒதுக்கம் | (1,953,331,229) | | (1,606,717,226) | |
| மூலதன ஒதுக்கம் | 101,508,707 | | 86,611,119 | |
| **மொத்த தேறிய சொத்து** | | 4,721,481,915 | | 4,361,079,284 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **6,238,833,441** | | **5,738,127,774** |
| ***(பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி)*** | | | | |

இந்த நிதி அறிக்கைககள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பொதுத்துறை கணக்கியல் தரங்கள் (SLPSAS) பல்கலைக்கழக சட்டம் 16,1978 இல் பகுதி 106(1) பகுதி 107(11) மற்றும் நிதிச்சட்டம் 38,1971 இல் பகுதி 13 (6) இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் எவ். சி. ராகல்
கணக்கியல் அதிகாரி,
உபவேந்தர்.

அ. பகீரதன்,
உதவி கணக்கியல் அதிகாரி,
பதில் பதிவாளர்.

மொ. மு. மொ. பாரிஸ்,
நிதியாளர்.

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

*மறைமுக முறையிலான நிதிப்பாய்ச்சல் கூற்று*

*2018, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிப்பாச்சல் கூற்று*

| **நடைமுறைச் செயற்பாடுகள் மூலமான நிதிப்பாச்சல் கூற்று** | *2018 ரூபா* | *2017 ரூபா* |
|---|---|---|
| சாதாரண செயற்பாடுகள் மூலம் ஏற்றம்/இறக்கம் | (345,591,810) | (335,047,226) |
| **காசற்ற செயற்பாடுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 381,815,116 | 331,617,567 |
| ஒதுக்கம் | (55,868,384) | (53,557,584) |
| முந்தைய கால மாற்றங்கள் | 48,167 | (631,544) |
| சொத்துக்கள் அகற்றல் மீது பெறப்பட்ட இலாபம் | (423,356) | - |
| பணிக்கொடை ஒதுக்கம் | 49,817,914 | 35,805,460 |
| குத்தகை வாகனங்களுக்கான நிதி செலவு | 3,137,761 | 2,548,695 |
| வட்டி வருமானம் | (1,804,017) | (6,691,193) |
| பொருட்களில் அதிகரிப்பு குறைவு | 1,502,168 | 1,872,901 |
| வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகளில் அதிகரிப்பு குறைவு | 5,892,107 | 19,911,013 |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு குறைவு | (31,865,553) | (18,530,485) |
| அட்டூறு செலவுகளில் அதிகரிப்பு குறைவு | (10,012,916) | 19,915,710 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (4,653,837) | (4,176,836) |
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | **(8,006,640)** | **(6,963,522)** |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | | |
| உபகரணக் கொள்வனவு | (668,923,550) | (2,592,163,575) |
| முடிவுறாத செயற்பாட்டு நிலை மூலதன வேலைகள் | (53,617,063) | 1,264,058,968 |
| புரிந்துகொள்ள முடியாத சொத்துக்கள் | (12,645,867) | (18,617,757) |
| பெறப்பட்ட வட்டி | 1,804,017 | 6,691,193 |
| முதலீடுகள் | (7,274,407) | (21,427,294) |
| சொத்துக்களை அகற்றுவதன் மூலம் விற்பனை வருமானம் | 423,356 | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்சல்** | **(740,233,514)** | **(1,361,458,465)** |
| **நிதி செயற்பாட்டிற்கான நிதிப்பாய்சல்** | | |
| வரையறுக்கப்பட்ட நிதிகள் மற்றும் வெளி மூலதன மானியங்கள் | 224,744,083 | 487,296,233 |
| மூலதன செலவீனங்களுக்கான அரசு மானியங்கள் | 692,650,000 | 613,450,000 |
| தேறிய நீண்ட கால பொறுப்புக்கள் | (3,890,159) | 7,282,940 |
| குத்தகை வாகனங்களுக்கான நிதி செலவு | (3,137,761) | (2,548,695) |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | **910,366,163** | **1,105,480,478** |
| தேறிய அதிகரிப்பு (குறைவு) பணம் மற்றும் அதற்கிணையானவை | **162,126,009** | **(262,941,509)** |
| ஆரம்பகால பணம், பணம்சார்ந்தவைக்கான ஆரம்ப மீதி | 202,013,187 | 464,954,696 |
| **முடிவடைந்த காலத்துக்கான பணம், பணம் சார்ந்தவைக்கான இறுதி மீதி** | **364,139,196** | **202,013,187** |

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

***2018, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்தில் தேறிய சொத்துக்களில் மாற்றங்களை ஏற்படுத்தியமைக்கான நிதிப்பாய்சல் கூற்று***

*ரூபா*

| | *திரட்டிய நிதி* | *பிணைக் கடமைப்பாட்டு ஒதுக்கம்* | *பொது ஒதுக்கம்* | *ஏனைய ஒதுக்கம்* | *மொத்தம்* |
|---|---|---|---|---|---|
| ***2016 திசெம்பர் 31இல் மீதி*** | 5,100,197,385 | 170,584,861 | (1,270,025,194) | 21,190,067 | 4,021,947,120 |
| *காலத்திற்கான ஏற்ற இறக்கம்* | - | - | (335,047,226) | - | (335,047,226) |
| *ஏனைய சீராக்கல்கள்* | - | - | (631,545) | | (631,545) |
| *ஏனைய ஒதுக்கத்தில் அதிகரிப்பு* | - | 17,684,643 | (1,013,260) | 65,421,051 | 82,092,434 |
| *மேலதிக பங்களிப்பு* | 592,718,501 | - | - | - | 592,718,501 |
| ***2017, திசெம்பர் 31 இல் மீதி*** | 5,692,915,886 | 188,269,504 | (1,606,717,226) | (86,611,119) | 4,361,079,284 |
| *காலத்திற்கான ஏற்ற இறக்கம்* | - | - | (345,591,810) | - | (345,591,810) |
| *ஏனைய சீராக்கல்கள்* | - | - | 48,166 | - | 48,166 |
| *ஏனைய ஒதுக்கத்தில் அதிகரிப்பு* | - | (3,563,684) | (1,070,359) | 14,897,588 | 10,263,545 |
| *மேலதிக பங்களிப்பு* | 695,682,731 | - | - | - | 695,682,731 |
| ***2018, திசெம்பர் 31 இல் மீதி*** | 6,388,598,617 | 184,705,820 | (1,953,331,229) | 101,508,707 | 4,721,481,915 |

ENP/BT/C/EUSL/01/2019/02

*உபவேந்தர்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,*
*2019, யூலை 18.*

## ***இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2018, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை***

*1.* ***நிதிக் கூற்றுக்கள் :***

*1.1* ***முனைப்பழியான அபிப்பிராயம்***

*இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி நிதி அறிக்கைகளின் மீதான கணக்காய்வானது 2018, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலை கூற்றுகள் மற்றும் நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களின் அறிக்கை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளிட்ட நிதிநிலை கூற்றுக்கான*

குறிப்புகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆவது உறுப்புரையிலுள்ள விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் இலங்கை தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டங்களுடன் இணைந்து எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆவது பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நாடாளுமன்றத்திற்கு எனது அறிக்கை சரியான நேரத்தில் தாக்கல் செய்யப்படும்.

இந்த அறிக்கையில், எனது முனைப்பழியான கருத்துப் பிரிவின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர, பல்கலைக்கழகத்தின் 2018, திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலை கூற்றுகள், நிதி செயலாற்றல் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியான அபிப்பிராயத்தின் அடிப்படைகள் :**

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07 ஐப் பொறுத்தவரை, காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். இருப்பினும், 2018, திசெம்பர் 31 இல் உள்ளவாறான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 2,712,073,167 காணியின் பெறுமதியை தனித்தனியாகக் காட்டாமல் ஒன்றாக சேர்த்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி மற்றும் அரசாங்கத்தின் போதிய உதவியின்றி ஒரு நிறுவனத்தை பராமரிப்பது மிகவும் கடினம் ஏனெனில் அதன் தொடர்ச்சியான பற்றாக்குறையைத் தொடர்ந்து அதன் தேறிய சொத்துக்கள், கணிசமாகக் குறைவடைந்துள்ளது. பல்கலைக்கழகத்தில் நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக பாதகமான பொது ஒதுக்கமே காணப்படுகிறது.

(இ) பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான மொத்தம் 210.3 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள பதினொரு காணிகள், மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் நிதிகூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திருமலை வளாகத்தில் உள்ள கலையரங்கு, தகவல் தொடர்பு மற்றும் வணிக கற்கைகள் பீடத்திற்கான ஐந்து மாடி கட்டிட வளாகம் மற்றும் இரண்டு மாடி கட்டிட வளாகத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 75 மில்லியன் செயன்முறை மூலதன வேலைகள் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) 2018 ஆம் ஆண்டிற்கான பட்டப்பின் கற்கை, ஆராய்ச்சி மற்றும் புலமை பரிசில் தொகைகளுக்காக கல்வி சார் ஊழியர்களுக்கு ரூபா 506,285 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், இது கற்பனை சொத்துகள் கணக்கில் பதிவிடப்படுவதற்கு பதிலாக பிற இயக்க செலவுகளின் கீழ் பதிவிடப்பட்டுள்ளது.

(ஊ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றுக்களின்படி, ரூபா 9,751,892 மற்றும் ரூபா 1,408,946 ஆகியவை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் (SVIAS) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து பெறத்தக்கதாகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த நிலுவைகள் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய மேற்கண்ட நிறுவனங்களின் நிதிகூற்றுக்களில் பிரதிபலிக்கப்படவில்லை எனவே அந்த நிலுவைகளின் துல்லியம், நம்பகத்தன்மை மற்றும் மீளளிப்பு ஆகியவை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(எ) முந்தைய ஆண்டின் நிதிக் கூற்றில் காட்டப்பட்ட வழியிலுள்ள பணம் ரூபா 9,400,000 சில்லறை கடன்பட்டோர் தொகை ரூபா 9,300,319 ஆக மாற்றப்பட்டுவிட்டது. இருப்பினும், முந்தைய நிலுவைகளின் மாற்றங்கள் குறித்து எந்த ஆதாரத்தையும் கணக்காய்வின் போது பல்கலைக்கழகம் சமர்ப்பிக்கவில்லை.

(ஏ) ஆண்டிறுதியில் திருகோணமலை வளாகத்தின் வாகனத்தின் தேய்மானம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுக்காக மதிப்பாய்வு செய்யப்பட்ட தொகை ரூபா 8,818,186 இருப்பினும் இந்த தொகை நிதிக் கூற்றுகளில் ரூபா 4,641,750 என காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சொத்துக்களின் மதிப்பு நிதிக்கூற்றுகளில் ரூபா 4,176,436 என குறைத்து காட்டப்பட்டுள்ளது.

(ஐ) முந்தைய ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்படியான நிலையான சொத்துக்களின் ஆண்டிறுதி இருப்பு ரூபா 3,279,124 நடப்பு ஆண்டின் கணக்குகளுக்கு, மீதியை முன்கொண்டுவரும் போது ரூபா 3,273,600,680 ஆக காணப்பட்டது. இதனால் நிதியறிக்கையில் ரூபா 5,513,510 ஆக வேறுபாடு காணப்பட்டது.

(ஓ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் துணைவேந்தர் நிதியத்தின் இருப்பு, நிதிநிலை அறிக்கைகளின்படி, ரூபா 2,194,647 அந்த நிதி அறிக்கைகளுக்கான அட்டவணைகளின் படி ரூபா 2,340,078 இதன் விளைவாக ரூபா 145,431 நியாயமற்ற வேறுபாடு காணப்பட்டது.

இந்த கணக்காய்வை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLAuSs) இணங்க மேற்கொண்டேன். நிதிக்கூறுகளின் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் அந்த நியமங்களின் கீழ் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியான கருத்துக்கு ஒரு அடிப்படையை வழங்க நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்று நான் நம்புகிறேன்.

02-224

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கிளை : கறுவா தோட்டம்
களுவா ஹேவகே சத்துரிக்க தத்சரணி

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2019, ஒற்றோபர் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

" களுவா ஹேவகே சத்துரிக்க தத்சரணி கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பாயிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 20.01.2016 ஆந் திகதியிடப்பட்ட 2789 இலக்க அடகு முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் என்பதுடன், 17.09.2019 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட, முறி மீது (அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து தொளாயிரத்து எண்பத்தைந்து ரூபா எண்பத்தொன்பது சதம்) ரூபா 64,77,985.89 கொண்ட பணத்தொகை ஒன்று, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல்.சீ. ஸ்தாபனத்தினால் களுவா ஹேவகே சத்துரிக்க தத்சரணிக்கு வழங்கப்பட்ட வீட்டு கடன் வசதி வாய்ப்பினை மீள பெறுவதற்கான பாதுகாப்பிற்காக வழங்கப்பட்டது.

அத்துடன் தற்போது ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல்.சீ. தாபனத்திற்கு 17.09.2019 அன்று வரை ரூபா 64,77,985.89 (அறுபத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து தொளாயிரத்து எண்பத்தைந்து ரூபா எண்பத்தொன்பது சதம்) கொண்ட பணத் தொகை முன் சொல்லப்பட்ட முறி தொடர்பாகவும் அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 2789 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 64,77,985.89 கொண்ட பணத்தொகையை 17.09.2019 ஆந் திகதி வரையிலும் அதன் பின்னர் விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எல்.பி. சேனநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள சியன்ன கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள மஹர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிரிபத்கொட தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 248B இற்கு உட்பட்ட கிரிலவெல்ல கிராமத்தில் உள்ள கோன்னகஹவத்த மற்றும் மில்லகஹாவத்த (பகுதி) என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம் உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.சி.ஏ. இந்திரரட்னவினால் தயாரிக்கப்பட்ட 14, நவெம்பர் 1992 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 251 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A2 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : பீ.டி. வாலிஸ் பெரேரா மற்றும் பி. கே. ஹேரத் பெரேராவினால் உரிமை கோரப்படும் காணிகள் ; கிழக்கு : டபிள்யூ. ஏ கருணாரட்னவினால் உரிமை கோரப்படும் காணி ; தெற்கு : வரைபட இலக்கம் 251/92 இல் உள்ள காணித்துண்டுகள் A1 மற்றும் A3 ; மேற்கு : எம்.பி. ஜூவனிஸ் பெரேரா மற்றும் ஏனையவர்களால் உரிமை கோரப்படும் காணி அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 251 இற்கு அமைவான இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணத்தை கொண்டது. கம்பஹா காணி பதிவகத்தில் M391/47 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

முன்சொல்லப்பட்ட ஆதனம் மீள அளவை செய்யப்பட்ட பகிரப்பட்ட பின்வரும் காணி–

1. மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் உள்ள சியன்ன கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள மஹர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிரிபத்கொடை தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 248B இற்கு உட்பட்ட கிரில்லவெல கிராமத்தில் உள்ள கொன்னகஹவத்த மற்றும் மில்லகஹவத்த மற்றும் கொங்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். சமரவிக்ரவினால் தயாரிக்கப்பட்ட 05, பெப்புருவரி 2006 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 28/2006 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு X என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: தற்போது பீ. டி. வர்லிஸ் பெரேரா மற்றும் கே.ஏ. ஹேரத் பெரேராவின் காணிகள் ; கிழக்கு : முன்னர் டபிள்யூ. ஏ. கருணாரத்னவின் காணி தற்போது முதியோர் இல்லத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது; தெற்கு : வரைபட இலக்கம் 251 இல் உள்ள காணித்துண்டுகள் A1 மற்றும் A3 (வீதி 10 அடி) ; மேற்கு : வரைபட இலக்கம் 1552 இல் உள்ள காணித்துண்டுகள் 2, 3 மற்றும் 4, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 28/2006 இற்கு அமைவான இருபது பேர்ச் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்த்தீரணமானது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள சியன்ன கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள மஹர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிரிபத்கொட தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 248B இற்கு உட்பட்ட கிரில்லவெல்ல கிராமத்தில் உள்ள கோன்னகஹவத்த மற்றும் மில்லகஹாவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. எல். பீ. பிரான்சிஸ் பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 12, ஒற்றோபர் 1989 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1552 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 5 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 4 ; கிழக்கு : எம். ரி. இமநோனாவினால் உரிமை கோரப்படும் காணி (தற்போது ஆர். எஸ். எஸ். லயனல் மெண்டிசினால் உரிமை கோரப்படுவது) ; தெற்கு : வீதி ; மேற்கு : வீதி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1552 இற்கு அமைவான மூன்று தசம் இரண்டு பூச்சியம் (0ஏ. 0றூ. 3.20பே.) விஸ்தீரணத்தை கொண்டது. கம்பஹா காணி பதிவகத்தில் M391/48 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

முன்சொல்லப்பட்ட ஆதனம் மீள அளவை செய்யப்பட்ட பகிரப்பட்ட பின்வரும் காணி–

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் உள்ள சியன்ன கோறளவின் அத்திக்காரி பற்றுவில் உள்ள மஹர பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மஹர பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிரிபத்கொடை தெற்கு கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 248B இற்கு உட்பட்ட கிரில்லவெல கிராமத்தில் உள்ள கொன்னகஹவத்த மற்றும் மில்லகஹவத்த மற்றும் கொங்கஹாவத்த என அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். சமரவிக்ரவினால் தயாரிக்கப்பட்ட 05, பெப்புருவரி 2006 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 28/ 2006 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு Y என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்– வடக்கு: வரைபட இலக்கம் 1552 இல் உள்ள காணித் துண்டு 4; கிழக்கு : வரைபட இலக்கம் 251 இல் உள்ள காணித்துண்டு A3 (வீதி 10 அடி) ; தெற்கு : வரைபட இலக்கம் 251 இல் உள்ள காணித்துண்டுகள் 3A மற்றும் வீதி (ரம்முத்துகலவில் இருந்து வயல் வெளிக்கு) ; மேற்கு : வரைபட இலக்கம் 251 இல் உள்ள காணித்துண்டு 4 மற்றும் வீதி (ரம்முத்துகலவில் இருந்து வயல் வெளிக்கு) அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 28/2006 இற்கு அமைவான இரண்டு தசம் ஐந்து ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 02.55பே) விஸ்தீரணமானது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.சி.ஏ. இந்திர ரட்னவினால் தயாரிக்கப்பட்ட 14.11.1992 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 251 இல் காணித்துண்டு A3 என அடையாளம் இடப்பட்ட வீதி மேலானதும் உடனானதுமான பாதை உரிமையும் சேர்த்து, அத்துடன் சொல்லப்பட்ட 20.01.2016 திகதியிடப்பட்ட அடகு முறி இலக்கம் 2789 இன் இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்),
சபைச் செயலாளர்.

02-315